பெரியார் மாவட்ட வரலாற்று ஆவண ஆய்வுக்குழு

செய்திமலர்

பதிப்பாளர் :
வி. கே. சுப்புராஜ், இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சியர்,
பெரியார் மாவட்டம்.

தொகுப்பாளர் :
ம. மோகன், எம். ஏ.,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், ஈரோடு.

மலர் : 3 — ஜுன் : 1991

சமய ஒற்றுமைக்கு ஓர் சான்று.

விசயமங்கலம் சமணர் கோயில்.

தமிழகத்தை ஆட்சி புரிந்த பல்வேறு மன்னர்கள் இருந்த காலத்தில் மதக்கோட்பாடுகளை எடுத்துக் கூறும் வகையில் கோயிலை கட்டினார்கள். அவற்றுள் மிகப் பழமையான கோயில்கள் தொல்பொருள் ஆய்வு காப்புத் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் பெரியார் மாவட்டத்தில் உள்ள விசயமங்கலம் சமணர் கோயில் பழமையான கோயில் ஆகும்(கி. மு. 322-298) இல். மகத நாட்டை ஆண்ட சந்திரகுப்த மௌரியர் காலத்தில், அந்நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் பெரும் பஞ்சம் வரும் என்பதை உணர்ந்த பத்திரபாகு எனும் முனிவர், சமண துறவிகளை காப்பாற்ற, அவர்களை தென்னாட்டிற்கு அழைத்து வந்தார். இக்காலத்தில் தான் கொங்கு நாட்டில் சமணம் பரவியிருக்க கூடும்.

விசயமங்கலத்தில் உள்ள சமணத்தலம் மிகப்பெரியதாகும். இங்கு எட்டாம் தீர்த்தங்கரரான சந்திர பிரப தீர்த்தங்கரர் கோயில் உள்ளது. விசயமங்கலம் சமணக் கோயிலை நெட்டை கோபுரம் என அழைக்கின்றனர். 1400 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இக்கோயில் திருப்பணி அவ்வப்போது பல மன்னர்களால் விரிவு படுத்தப்பட்டது. சோழன், கரிகாலன் இத்தளத்தில் தனது வெற்றியின் சின்னமாக விசயபுரி அம்மன் கோயிலை உருவாக்கி, இக்கோயிலுக்கு மானியங்கள் வழங்கியமை சமய ஒற்றுமைக்கு ஓர் சான்று. விசயமங்கலத்தில் தமிழினுடைய இலக்கண நூல் நன்னூல் பவணந்தி முனிவரால் இங்குதான் இயற்றப்பட்டது.

ஈரோட்டின் பழஞ் சிறப்புகள்.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை

கி.பி.	
922	சோழன் பராந்தகன் திருமண, சுடு காட்டு வரி விதித்தல்
948	கொல்லம்பாளையம் தாழி ஏரி வெட்டுதல்
1079	தீயவரைக் கொன்றால் தூக்கு (தலை) (விலை) இல்லை எனத் தீர்மானித்தது
1204	சிவாலயத்திற்கு ஆவணிப் பேரூர் மானியம்
1265	காலிங்கராயன் கால்வாய் வெட்டி முடித்தல்
1275	பெருமாள் கோவிலுக்குச் சேமூர் மானியம்
1340	சிவாலயத்திற்கு திண்டல் மானியம்
1420	பெருமாள் கோயிலில் ஸ்ரீ பாத மண்டபம் கட்டப்பட்டது
1502	சிவாலயத்திற்கு பாலமேடு மானியம்
1527	இரு கோயில் கட்கும் லக்காபுரம் மானியம்
1588	கமல புஷ் கரணி குளம் வெட்டுதல்
1628	சந்திரமதி முதலியார் மடம் ஏற்பட்டது
1630	கண்டிரவ நரசராஜா கோயில் திருப்பணி
1640	திருமலை நாயக்கனால் கோட்டை புதுப்பித்தது
1643	முத்து வீரப்ப நாயக்கன் சத்திரம் (வீரப்பன் சத்திரம்) ஏற்பட்டது
1656	மூக்கறுப்புப் போர் நடந்தது.
1672	மைசூர் X மதுரை நாயக்கர் போர்
1779	ஸ்வார்ட்ஸ் பாதிரியார் வந்தது
1790	மெடோஸ் ஈரோட்டைக் கைப் பற்றினான்
1791	ஈரோடு கம்பெனியார் வசம் ஆதல்
1799	கம்பெனி ஆட்சி ஏற்படல், தலைநகர் பவானி
1804	மாவட்டத் தலைமை பவானி யிலிருந்து கோவை செல்லல்
1805	தீரன் சின்னமலையை தூக்கிலிடல்

கி பி.	
1815	கொங்கலம்மன் கோயில் திருப்பணி
1819	பருத்தி முதலில் பயிரிடுதல்
1830	லண்டன் மிஷன் பணி தொடங்கியது
1860	ஈரோடு தாலூகா தலைநகர் ஏற்பட்டது
1862	சிறைச்சாலை ஏற்பட்டது
1871	நகராட்சி ஏற்பட்டது
1871	முதல் மக்கள் கணக்கெடுப்பு (10201)
1876	காலரா, தொடர்ந்து பஞ்சம்
1878	பஞ்ச நிவாரணப் பணிகள் ஈரோடு கோட்டை இடிப்பு
1882	காவிரியில் மிகப் பெரிய வெள்ளம்
1891	ஜெர்மானியர் உல்சு கல்வெட்டுப்படி எடுத்தல்
1893	வாகீச பக்த சமாஜம் ஏற்படுத்தியது (அப்பர் சுவாமிகள் மடம்)
1910	இரண்டாம் முறை கல்வெட்டுப்படி எடுத்தல்
1917	(சி. எஸ், ஐ) கோஷா ஆஸ்பத்திரி தோற்றம்
1918	நீராவி எந்திரம் மூலம் தண்ணீர் வினியோகம்
1923	கட்டாய கல்வி முதலில் அமுல்
1926	ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் அரங்க நாதர் பதிகம் பாடுதல்
1930	இசைக்காகத் தமிழகத்திலேயே முதல் மாநாடு
1934	முதல் ஆணையர் நியமனம்
1938	மின்சார எந்திரம் மூலம் நீர் வினியோகம்
1939	நகராட்சி மூன்றாம் நிலையானது
1940	நகராட்சி இரண்டாம் நிலை ஆனது
1945	வீதிகளுக்கு மின்சாரம்
1949	ஈரோடு நகராட்சி முதல் நிலை ஆனது

பெரியார் மாவட்டத்தில் நிகழ்ந்த போர்கள் :

பெரியார் மாவட்ட வரலாற்றில் நான்குபோர்கள் நடைபெற்றுள்ளன.

முதல் போர் :

கி. பி. 1628-ஆம் ஆண்டு மதுரைத் திருமலை நாயக்கனின் தளபதி இராமப்பையனுக்கும், தாரமங்கலம் கெட்டி முதலியாருக்கும் ஈரோட்டில் போர் நடைபெற்றது. இதனை இராமப்பையன் என்னும் நூல் விளக்குகிறது.

இரண்டாம் போர் :

இது மைசூர் மன்னருக்கும், மதுரை நாயக்க மன்னருக்கும் நிகழ்ந்த கொங்குநாடு பற்றிய உரிமைப்போராகும். கி. பி. 1672-ஆம் ஆண்டு மதுரை சொக்கநாத நாயக்கனுக்கும், மைசூர் அரண் தொட்ட தேவராயனுக்கும் போர் நடைபெற்றது. இதனை சரித்திர ஆசிரியர்கள் ஈரோட்டுப் போர் என அழைக்கின்றனர். மதுரை நாயக்கனுக்குத் துணையாக செஞ்சிக் கோட்டை நாயக்கனும், சிவாஜியின் தலைமையில் எக்கோஜியும் வந்தனர். இப்போரில் தான் மைசூர் தளபதி உறம்பையன் மதுரை வீரர் மூக்குகளை அரிந்தான். அதனால் இங்கு நடைபெற்ற போருக்கு மூக்கறுப்புப் போர் என்ற பெயர் பின்பு அழைக்கப்பட்டது.

மூன்றாவது போர் :

கி. பி. 1768-ஆம் நூற்றாண்டு கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளுக்கும் (திப்பு சுல்தானுக்கும்) மைசூர் படைகளுக்கும் ஈரோட்டில் போர் நடைபெற்றது. இப்போரில் ஆங்கிலப் படைகள் தோல்வியுற்றன.

நான்காவது போர் :

திப்புசுல்தானுக்கும் ஆங்கிலத் தளபதி மெடோவிற்கும் மிகக் கடுமையாகப் போர் நடைபெற்றது. மைசூர் படைக்குத் திப்புவே தலைமை தாங்கினான். 1790-ஆம் ஆண்டு ஆறாம் நாள் திப்பு வீழ்ந்தான். கொங்கு நாட்டில் ஆங்கில அரசு வேரூன்றியது.

வரலாற்று சிறப்புள்ள முக்கிய இடங்கள்

அரச்சலூர் :

அரச்சலூரில் உள்ள மலைக்குகையில் கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் சமணப் பெரியார்கள் வாழ்ந்த கற்படுக்கைகள் உள்ளன. அந்தக் குகையில் தரைப் பகுதியில் 'தா' 'தை' எனப் பல இசை எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் அருகில் ''மணிய வண்ணக்கன் தேவன் சாத்தான் என்பவன் இசை எழுத்துக்களை அமைத்துள்ளான்'' என்ற குறிப்புள்ள ஒரு கல்வெட்டும் உள்ளது. இதுவே தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இசைக் கல்வெட்டுக்களில் தொன்மையானது. தமிழும் வட்டெழுத்தும் கலந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் காணப்படும் வாசகங்கள் பின்வருமாறு உள்ளது.

''எழுத்தும் புனருத்தான் மணிய
வண்ணக் கண் தேவன் சாத்தான்''

கோபிசெட்டிப்பாளையம் :

பண்டைய காலத்தில் மாக்கல்லினால் மட்பாண்டங்கள் செய்யும் கலை செய்யப்பட்டு வந்துள்ளது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக கோபிக்கு அருகேயுள்ள கணக்கம்பாளையம் என்ற கிராமத்தில் நிலத்திற்கு அடியிற் கிடைத்த மட்பாண்டங்கள் எடுத்துக் காட்டாக உள்ளது. இவை ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

பர்கூர் மலைப்பகுதி :



சோளக பழங்குடியின் தெய்வ சிற்பங்கள்.

பவானி தாலூகா :

முன்காலத்தில் பர்கூர் மலைப்பகுதி கன்னட அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அக்காலத்தில் போரில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடிய வீரர்களின் நினைவாக கல்லினால் வீரக்கற்கள் செதுக்கப்பட்டு வந்துள்ளது. பர்கூர் மலையில் வசிக்கும் மக்கள் இன்றளவும் பசவேசுவரரை வணங்கி வருகிறார்கள். இம் மலைப்பகுதிகளில் 'சோளகர்' என்ற பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். சோளகர்கள் பயன்படுத்திய பொருட்கள் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கொடுமணல் :

பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் நொய்யல் ஆற்றின் வடகரையில் ஈரோட்டில் இருந்து தென்மேற்கே 40 கி, மீ, தொலைவிலும், சென்னிமலையிலிருந்து 15 கி. மீ. தொலைவிலும் உள்ளது. சங்க காலத்தில் கொடுமணம் எனும் பெயரில் அரிய கற்களைக் கொண்டு செய்யப்பட்ட நகைகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. கொடுமணலில் இருந்து 1 கி மீ. கிழக்கே இருக்கின்ற செலாவணக்காடு என்று கூறப்படும் நத்தம் பகுதியிலும் அதற்கு அருகே வடகிழக்கிலும், கிழக்கிலும் உள்ள பழைய ஈமக்காட்டுப் பகுதியிலும், ஊரிருக்கைக் குழிகளில் பல பகுதியின் சுவரின் அடிப்பகுதிகள், வீட்டுத் தரைகள், மரத்தூண்கள், ஊன்றப்பட்ட குழிகள், அடுப்புப் பகுதிகள் ஆகியவற்றுடன் கொல்லர் உலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொடுமணல் இரும்புக்கும் அரிய கல்மணிகளுக்கும் பெயர் பெற்ற தொழில் கூடமாக இருந்துள்ளது.

கொடுமணலில் கிடைக்கப் பெற்ற பல மட்பாண்டங்களின் ஓடுகளில் பொறிக்கப்பட்ட குறியீடுகளும், எழுத்துக்களும் உள்ளன. அதில் உள்ள எழுத்துக்கள் தென்பிராமி, அல்லது தமிழி எனப்படும். இந்த ஊர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிபத் தொடர்பு மையமாக விளங்கியுள்ளது. கொடுமணல் அகழாய்வு செய்ததன் மூலமாக கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு முடிய சுமார் ஐநூறு ஆண்டுகள் கொடுமணல் செழிப்புடன் விளங்கியிருக்கலாம் எனத் தெரிகிறது இதன் வாயிலாக அங்கு கிடைத்துள்ளப் பொருட்கள் வரலாற்று காலத்துக்கு முந்திய சரித்திர உண்மைகளை நமக்கு தெரிவிக்கின்றது. கொடுமணலில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

ம. மோகன், காப்பாட்சியர்.

புகழ்பெற்ற பெரியார் மாவட்டக் கோயில்கள்.

ஈரோடு ஈசுவரன், பெருமாள், மகிமாலீசுவரர் கோயில்கள், பவானி சங்கமேசுவரர் கோயில், கொடுமுடி ஈசுவரன் கோயில் போன்றவை.

சமணக் கோயில்கள் :

விசயமங்கலம் சந்திரபிரபா தீர்த்தங்கரர் கோயில், திங்களூர் புட்பநாதர் கோயில், சீனாபுரம் ஆதிநாதர் கோயில், பூந்துறை பஞ்சுவநாதர் கோயில்கள் ஆகும்.

கிறித்துவ கோயில்கள் :

ஈரோடு பிரப் நினைவாலயம், தாராபுரம் மாதா கோயில், தாளவாடி மாதா கோயில்கள் ஆகியவை.

முகமதியக் கோயில்கள் :

ஈரோடு, தாளவாடி, அக்ரஹாரம் போன்ற இடங்களில் திப்பு காலத்திய மசூதிகள் உள்ளன. ஈரோடு பெரிய பள்ளிவாசல் (ஜாமியர் மஸ்ஜித்) 100 வருடங்களுக்கு முந்தியது.

ம.மோகன், காப்பாட்சியர்.

கொங்கின் பழம்பெரும் ஊர்கள் :

கொடுமணம், ஒகந்தூர், கொல்லி, பொதினி நன்றா, படியூர், இடையாறு, பெருந்தலை, குடவாயில, ஈந்தூர், பொத்திப்பாளையம், பொன்முடி, காக்கைபாடி, குதிரை மலை ஆகியவை.

கொங்கில் சித்தர்கள் வாழ்ந்த ஊர்கள் :

சித்தர்கள் வாழ்ந்த ஊர்கள் :

பெயர்	ஊர்	பெயர்	ஊர்
கருவூர்ச்சித்தன்	(கரூர்)	கொங்கனாச் சித்தர்	(ஊதியூர்)
கஞ்மலைச் சித்தர்	(கஞ்சமலை)	இடை ஞானியார்	(தென்கரை)
போகர்	(பழனி)	பாம்பாட்டி சித்தர்	(மருதமலை)

பெருங்கதை கல்வெட்டு :

சிலப்பதிகாரத்திற்கு இணையாக வைத்து எண்ணப்படும் நூல் பெருங்கதை. அதனை ஆக்கியோர் கொங்குவேளிர் அவர் விசயமங்கலத்தில் வாழ்ந்த காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு ஆகும். விசயமங்கலத்தில் அழகான வடமொழிக் கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. "ஸ்ரீ பிருகத் கதா லாவண்ய ரத்ப்ரதாபஹ" பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும் மூழ்கி-யிருக்கிறது - என்பது இதன் பொருள். வழவழப்பான கல்லில் சுவஸ்திக் சின்னத்துடன் உள்ளது. இலக்கியத்துடன் சார்ந்துள்ள பழமையான கல்வெட்டில் இதுவே தொன்மையானது.

கம்பன் செஞ்சொற் கொண்டல்
மணிவிழா மலர், மே 1981

மாணிக்கவாசகரும், கொங்கும் :

தேவாரம் பாடிய மூவர் முதலிகள் போல மாணிக்கவாசகர் விரிவான தலயாத்திரை செய்து பாடியவர் அல்லர். இருப்பினும் அவிநாசி, கொடுமுடி, குடக்கோட்டூர் ஆகிய மூன்று கொங்குநாட்டுத் தலங்களை மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

"அரிய பொருளே அவிநாசி அப்பா
பாண்டி வெள்ளமே
மொக்கனி அருளிய முழுத்தழல் மேனி,
சொக்கதாகக் காட்டிய தொன்மையும்"

என்பன திருவாசக அடிகள். கொடுமுடி, அவிநாசி, விசயமங்கலம், கூனம்பட்டி ஆகிய இடங்களில் மாணிக்கவாசகர் திருமடங்கள் உண்டு.

—அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகம்

ஈரோட்டின் அன்றைய நிலை.

17ம் நூற்றாண்டில் ஈரோட்டில் ஒரு பெரிய மண் கோட்டை இருந்தது. ஆங்கிலப் படையின் பிரிவு அப்பொழுது இருந்தது அவர்களில் பலர் திப்புவிடம் பணி ஆற்றியவர்கள். ஈரோட்டில் பல வீடுகள் அழிந்த நிலையில் இருந்தது. திப்பு சுல்தான் காலத்தில் 3,000 வீடுகள் இருந்தன. பிறகு ஆங்கிலேய அதிகாரி புக்கானன் ஈரோடு வருகைதந்த பொழுது 400 வீடுகள்தான் இருந்தது. ஆங்கிலேயருக்கு ஈரோடு ஒரு இராணுவ முகாமிற்கு ஏற்றதாக அமைந்தது. கொங்கு நாட்டிற்கு மையத்தில் ஈரோடு அமைந்த காரணத்தினால் இராணுவ முகாமிற்கு ஏற்றதாகக் கருதப்பட்டது.

ஈரோட்டில் குடியிருந்த மக்களுடைய முக்கிய தொழில் நெசவுத் தொழிலாக இருந்தது. நெசவுத் தொழிலில் சுமார் 2,050 பேர் ஈடுபட்டனர். கொங்குநாடு ரோமானியருடன் தொடர்பு கொண்டிருந்ததாக புக்கானன் கூறியுள்ளார்.

ஆலய சிற்ப வடிவமைப்பு :

திருத்தொண்டீச்சுவரம் கோயில் கோட்டையில் உள்ளது. அச்சிவன் கோயிலில் ஒவ்வொரு ஆண்டின் மாசித் திங்கள் 25, 26, 27 ஆகிய நாட்களில் சூரியனின் கதிர் தொண்டீச்சுரரின் மீது படுகின்றது. சூரியனின் காலைக் கதிர் தொண்டீச்சுரர் மீது விழுமாறு கருவறையும், கோயிலின் மண்டபங்களும் திறம்பட கட்டப்பட்டுள்ளன, கதிரவனின் ஒளி பல மண்டபங்களையும் கடந்து இலிங்கத்தின் மீதுப்படும். இதற்கு காரணம் ஆலய சிற்ப வடிவமைப்பு முறைச் சிறப்பே ஆகும்.

பெரியார் மாவட்ட ஊர்ப் பெயர் மாற்றங்கள் :

பழைய பெயர்		இன்றைய பெயர்	பழைய பெயர்		இன்றைய பெயர்
இராசராசபுரம்	—	தாராபுரம்	நம்பி பேரூர்	—	நம்பியூர்
கற்றான் காணி	—	கத்தாங்கண்ணி	தலையநல்லூர்	—	சிவகிரி
புகழ் மங்கலம்	—	பழமங்கலம்	சிலம்பூர்	—	எண்ணமங்கலம்
குரம் நிலை	—	கொளாநல்லி	அகளங்கநல்லூர்	—	பருவாச்சி
காஞ்சிக்கூவல்	—	காஞ்சிக்கோவில்	பட்டாலி	—	அரசம்பாளையம்
பெரும்பழன நல்லூர்	—	பெருமாநல்லூர்	ஈரோடை	—	ஈரோடு

சோழப் பெருந்தடம் :

கொங்குநாட்டு வடகரை நாட்டுப் பகுதியிலிருந்து (எருமையூர்) மைசூர் செல்வதற்கு ஒரு சுருக்கு வழியாக மலைப்பாதை அமைத்தவர் சோழ அரசன் ஆவார். மைசூரில் உள்ள கோலார் மாவட்டத்தில் கிடைத்த பொன்னை பெற்று வர நேர் பாதையாக ஒரு மலை வழிப்பாதை ஆகும். இன்றும் அப்பகுதி மலைவாழ் மக்களின் வாயிலாக அவ்வழிப் பாதையை அறிய இயலும்.

தீரன் சின்னமலை : (1756 - 1805)

பெரியார் மாவட்டத்தில் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள மேலப்பாளையம் என்ற இடத்தில் 1756-ஆம் ஆண்டு பிறந்தவர். பெரியார் மாவட்டம் ஈரோடு காங்கேயம் சாலையில் அறச்சலூர் அமைந்துள்ளது. அறச்சலூரிலிருந்து தென்கிழக்கில் சுமார் 5 மைல் தூரத்தில் ஓடாநிலை என்ற பகுதியை ஆண்ட குறுநில மன்னர் தீரன் சின்னமலை ஆவார்.

"கொங்கு நாட்டார் எதற்காக மைசூருக்கு திறை செலுத்துவது" என்று கூறி மைசூருக்கு சென்று வரிப் பணத்தை நிறுத்திவிட்டு, மைசூர் ஆட்சியினை எதிர்த்தவர். மைசூர் ஆட்சியின் வீழ்ச்சிக்கு பின்னர், தமிழகத்தில் கொங்கு பகுதியில் 1801 முதல் 1805 வரை ஆங்கிலேயப் படையை தமது பகுதிக்குள் நுழைய விடாமல் தடுத்து வீரப்போர் புரிந்தவர். இறுதியாக ஆங்கிலேயர் மறைமுகமாக தந்திரத்தைக் கையாண்டு சிறைபிடித்தனர். பின்னர் சங்ககிரிக் கோட்டையில் அவரை தூக்கிலிட்டனர்

கர்நாடக துறைத்தனத்துக் கொங்கு கோட்டைகள் :

திண்டுக்கல்	—	பெரிய சேலம்	அந்தியூர்	—	ஆத்தூர்
தாராபுரம்	—	சாம்பள்ளி	பழையகோட்டை	—	அனந்தகிரி
கோயம்பத்தூர்	—	யோமலூர்	ஈரோடு	—	பரமத்தி
தனாயக்கன்கோட்டை } சத்தியமங்கலம்	—	காவேரிபுரம்	காங்கயம்	—	மோகனூர்
			விசயமங்கலம்	—	சக்கரகிரி

—அரசினர் கீழ்த்திசைச் சுவடி
நூலகப் பட்டியல்

திருவுருவும் மருந்தும் :

கருவறையில் திருஉருவம் நிலை நிறுத்துகின்றபோது எட்டுவிதமான மருத்துவ பொருட்களை சேர்த்து இடித்து பீடத்தின் மேல் பள்ளம் தோண்டி அதனுள் இட்டு பிறகு திருவுருவத்தை அமைக்கின்றனர். இம்முறைக்கு அஷ்டபந்தனம் எனப்படும்.

அவற்றுள் கலக்கப்படும் மருந்துப் பொருட்கள் ;

1. கொம்பரக்கு	2. சுக்காள் தூள்	3. குங்கிலியம்
4. கற்காவி	5. செம்பஞ்சு	6. சாதிலிங்கம்
7. தேன்மெழுகு	8. வெண்ணெய் போன்றவை ஆகும்.	

நாட்டின் பெயரால் பல பகுதிகள் :

அன்றைய கொங்குநாடு, வேணாநாடு, குட்டநாடு, குடநாடு, விமலநாடு, காமர்நாடு, முதிர்நாடு, விச்சிநாடு, பூமிநாடு, துளுநாடு, எருமைநாடு, கொண்கானநாடு, பழனநாடு, பொத்தப்பிநாடு, கட்டிநாடு, புண்ணாடு, கொங்கர்நாடு, பொன்குன்றநாடு, பழனநாடு; துவரைநாடு, தகளூர்நாடு இப்படியாக அழைக்கப்பட்டன.

கட்டிடக் கலைத்திறன் :

கொடுமுடி திருத்தலத்தில் கொடுமுடி நாதர் வடிவுடை நாயகியின் திருவுருவம் அமைந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆவணி, பங்குனி மாதங்களில் நான்கு நாட்கள் கதிரவனின் ஒளிக் கதிர்கள், கோயில் விமானங்கள், கொடிமரம், நந்தி ஆகியவற்றினை கடந்து கருவறையினை அடைந்து கொடுமுடி நாதர் வடிவுடை நாயகியின் திருவுருவங்களில் படுகின்றது. இத்தகைய சிறப்பினை கோயில் வடிவமைத்த சிற்ப வல்லுநர்களின் கணிதவியல் கட்டிடக் கலைத்திறன் வியக்கத்தக்கதற்கு உரியதாகும்.

ஈரோட்டில் கல்வெட்டுக்களில் காணப்படும் மகளிர் பெயர்
(பல நூற்றாண்டுகளின் முற்பட்ட பெண்கள் பெயர்)

அரையவல்லி, முத்துப்பொன்னி, கோதைப்பிராட்டி, அழகிய நாச்சி, சிறுநல்லாள், பெருநல்லாள், தாயாண்டார், உலதுடையபிராட்டி, மூரிஅமுதனார், முக்கோக்கிழானடி.

— புலவர் இராசு

19-ம் நூற்றாண்டில் தமிழ் நூல்கள் :

1887-இல் ஈரோடு முன்சிப் துரைசாமிப்பிள்ளையைப் பாராட்டி நாகப்பகவுண்டர் என்பவர் ''பஞ்சரத்னப் பத்ஜாவளி'' பாடினார். 1890-ல் ஈரோடு கோட்டை மாரியம்மன் ''கும்மி'' என்ற நூலை ஜே. சக்ரபாணி பாடினார். 1891-ல் பாலர் தேர்வுக்கான கைப்புத்தகம் சி. சோசைபாவால் வெளியிடப்பட்டது. 1982-ல் சகல கலாநிலைய அச்சுக்கூடத்தில் ஈரோட்டில் ''ஒட்டியம் கல்லியம்'' என்ற நூல் வெளியிடப்பட்டது.

1893-ல் சில சட்ட நூல்களும், சோதிட நூல்களும் வெளியிடப்பட்டன.

— புலவர் இராசு

தேவாரப்பாடல் பெற்ற கொங்குத் தலங்களும், பாடிய புலவர்களும்.

1. திருநணா (பவானி) — திருஞானசம்பந்தர், தேவாரம்.
2. கொடுமுடி — அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர்.

வேண்டுகோள் :

18-ஆம் நூற்றாண்டு மரச்சிற்பங்கள்.

அருங்காட்சியகங்கள் நம்முடைய நாட்டில் கிடைக்கப் பெறும் நினைவுச் சின்னங்களை அவ்வப்போது பாது காப்பு முறைகளினால் பத்திரப்படுத்தி வருகின்றது. நமக்கு பின்னர்வரும் சந்ததியினருக்கு பயன்படும் வகையில் ''அருங்காட்சியகம்'' என்றதொரு நல்ல ஆய்வுக் கூடமாக அருங்காட்சியகங்கள் விளங்கி வருகின்றன. நாட்டில் கிடைக்கப்பெறும் கலைப்பொருட்கள் நம் எல்லோருக்கும் வரலாற்று உண்மைகளை எடுத்துக் கூறுவதாக அமைந்து உள்ளபடியால், பெரியார் மாவட்ட வரலாற்று ஆவணக் குழுவிற்கு தங்களிடமுள்ள பழையக் கடிதங்கள், செப்-பேடுகள், ஓலைச்சுவடி ஆகியவற்றை அளித்து உதவி, நமது பகுதியின் வரலாற்றுச் சிறப்புகளை முழுமையாக தொகுக்க உதவும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

ம. மோகன்,
காப்பாட்சியர்

The Periyar District Historical Archives News letter is Published by the chairman of the Committee Thiru. V. K. SUBBURAJ, I. A S, Collector, Periyar District.

Editor : M. MOHAN, M.A., Curator, Government Museum, Periyar District.

நூல்-அஞ்சல்
இ. அ. ப. மட்டும்

பெரியார் மாவட்ட
வரலாற்று ஆவண ஆய்வுக்குழு
செய்தி மலர்.

அனுப்புதல் :
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரியார் மாவட்டம்,
ஈரோடு-638 011.